25.07.2016

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆடிப் பெருக்கு விழா: மேட்டூர் அணையில் இருந்து கூடுதல் நீர் திறப்பு

ஆடிப்பெருக்கு விழாவையொட்டி, மேட்டூர் அணையில் இருந்து கூடுதல் நீரைத் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

விவசாயம் செழிக்க வேண்டி, காவிரி அன்னையை மலர் தூவி வணங்கும் விழா எனப்படும் ஆடிப்பெருக்கு விழா ஆகஸ்ட் 2-இல் கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, மேட்டூர் அணையில் இருந்து கூடுதலாக தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கைகள் விடுத்திருந்தனர். இப்போது அணையில் உள்ள நீர் இருப்பு, வந்துகொண்டிருக்கும் நீர் வரத்து ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, குடிநீர்த் தேவைக்காக 2,000 கன அடி நீர் விடுவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், விழாவுக்காக ஜூலை 25 முதல் 28-ஆம் தேதி வரை 4 நாள்கள் தினமும் விநாடிக்கு 3,000 கன அடி வீதமும், ஜூலை 29-ஆம் தேதி முதல் 31-தேதி வரை தினமும் விநாடிக்கு 1000 கன அடி வீதமும் கூடுதலாகத் தண்ணீரைத் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

## மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகள் விதை செலவை குறைக்க வலியுறுத்தல்

மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகள் விதை பரிசோதனை செய்து கொள்வது நல்லது என்று காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விதைப் பரிசோதனை அலுவலர் ஹேமேந்திர குமார் பாண்டே வெளியிட்ட அறிக்கை:

ஆடிப் பட்டத்தில் சாகுபடியாளர்களுக்கு அதிக இடுபொருள் தேவைப்படுவது, மணிலா விதைக்கேயாகும். எனவே, தரமான விதையாக இருந்தால் தேவையானவற்றை மட்டும் பயன்படுத்தி விதைச் செலவை

குறைக்கலாம். மணிலாவைப் பொருத்தவரை, குறைந்தபட்ச முளைப்புத் திறன் 70 சதவீதம் இருந்தால் தான் ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கையை பராமரிக்க முடியும்.

இவ்வாறு பராமரிக்கும்பட்சத்தில், ஒரு செடிக்கு 40 காய்கள் கிடைக்கும். இதனால் விவசாயிகள் தற்போது பெறுகின்ற மகசூலைவிட 50 சதவீதம் கூடுதலாகப் பெற முடியும்.

எனவே, விவசாயிகள் தங்களிடம் இருப்பில் உள்ள மணிலா விதையில் அரை கிலோ அளவுக்கு விதை மாதிரி எடுத்துக்கொண்டு விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம்,

காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு ரூ.30 பரிசோதனை கட்டணத்துடன் நேரில் அணுகலாம் அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கலாம் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

## தனியார் விதைப் பண்ணைகளில் அதிகாரிகள் ஆய்வு

தாராபுரம், அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இயங்கி வரும் தனியார் விதைப் பண்ணைகளில் விதைச்சான்று அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

தாராபுரம், சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஏராளமான தனியார் விதை பண்ணை, உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகளின் தரம் குறித்து ஈரோடு விதைச் சான்று உதவி இயக்குநர் தண்டபாணி தலைமையிலான அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

இதில், வயல்மட்ட நெல் விதைக் குவியலின் ரகம், கொள்ளளவு சரி பார்க்கப்பட்டது. எதிர்வரும் சம்பா பருவத்துக்கு ஏற்ற ரகங்களான ஏடிடி 38, ஏடிடி 46, சாவித்ரி, ஐஆர் 20, அனைத்து ரகங்களும் போதுமான அளவு உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்க தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டு உள்ளதா எனவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுத்தி செய்யப்பட்ட விதை நெல் குவியல்களில் மிதவைப் பரிசோதனையும், மூட்டைகளில் எடை அளவும் சரி பார்க்கப்பட்டது.

இதுகுறித்து விதைச்சான்று உதவி இயக்குநர் தண்டபாணி கூறுகையில், "தரமான விதைகளை உற்பத்தி செய்யுமாறும், பதிவேடுகளை முறையாக பராமரிக்கவும் விதை உற்பத்தி நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றத் தவறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். ஆய்வின்போது, விதைச்சான்று அலுவலர்கள் லதா, மணி, கோகுலவாசன், கௌசிகாதேவி ஆகியோர் உடனிருந்தனர்.

## தஞ்சையில் நாளை கறவை மாடு வளர்ப்புப் பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் கறவைமாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த இருநாள் பயிற்சி முகாம் செவ்வாய், புதன்கிழமைகளில் (ஜூலை 26,27) நடைபெறவுள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டுவர வேண்டும், மேலும் விவரங்களுக்கு 90471

57859, 04362 - 204009 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மதிப்புக்கூட்டப்பட்ட கேப்பை

கேழ்வரகு மாவை கூழ், களி, அடை போன்றவை தான் செய்து சாப்பிடுகிறோம். மிகவும் சிறிய அளவிலானகேழ்வரகை அப்படியே சமைக்க முடியாது. சாதமாகவைப்பதற்கு ஏற்றாற் போல் தீட்டவும் முடியாது. ஆனால் இப்போது கேழ்வரகையையும் தீட்டி கேழ்வரகு அரிசியாக விற்கின்றனர். இதனை அரிசி, வரகரிசி, தினையரிசி, குதிரைவாலி, சாமையைப் போல அப்படியே சாதமாக சமைக்கலாம். சர்க்கரை நோயாளிக்கு மட்டுமின்றி கால்சியச் சத்து தேவைப்படும் பெண்கள், குழந்தைகள் என அனைவருக்கும் ஏற்றதாக இது உள்ளது. கேழ்வரகிலிருந்து தற்போது ரவையும் தயாரிக்கும் தொழில்நுட்பம் வந்துள்ளது.

### மஞ்சளில் ஊடுபயிராக வெங்காயம்: வருவாய் கிடைப்பதால் மகிழ்ச்சி

ஈரோடு: ஈரோட்டில், மஞ்சள் பயிருக்கு நடுவே, சின்ன வெங்காயத்தை ஊடுபயிராக, விவசாயிகள் சாகுபடி செய்வது அதிகரித்துள்ளது.

இந்திய அளவில், மஞ்சள் விலை நிர்ணயம் செய்வதில், ஈரோடு முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவில் உற்பத்தியாகும் மஞ்சளில், 23 சதவீதம் ஈரோட்டில் தான் விளைகிறது. பருவமழை ஏமாற்றம், போதிய விலை கிடைக்காததால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டது. இந்நிலையில் மஞ்சள் நடுவே ஊடுபயிராக சின்ன வெங்காயம் பயிரிட்டால், ஓரளவுக்கு லாபம் கிடைக்கும் என்ற நோக்கத்தில், தற்போது அந்த பணிகளில் தீவிரம் காட்டுகின்றனர்.

இதுகுறித்து மஞ்சள் விவசாயிகள் கூறியதாவது: சில ஆண்டுகளுக்கு முன், மஞ்சள் விலை தங்கத்துக்கு நிகராக உயர்ந்தது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் சாகுபடிக்கு மாறினர். அதன் பின், விலை தொடர்ந்து சரிவு கண்டது. இதனால் மஞ்சளுக்கு மாறியவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். போதிய விலை கிடைக்காததாலும், பருவமழை பொய்த்ததாலும், வருவாய் பெறும் நோக்கில் மஞ்சளுக்கு இடையே, ஊடுபயிராக சின்ன வெங்காயம் சாகுபடி செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகிறோம். மூன்று மாதத்தில் இது அறுவடைக்கு வரும். இதனால் ஓரளவுக்கு லாபமும் கிடைக்கிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை

திண்டுக்கல்: 'கிசான் சுவீதா' எனும் மொபைல் ஆப்ஸ் மூலம் விவசாயிகள் வேளாண் சார்ந்த தகவல்களை பெறலாம் என, வேளாண் துணை இயக்குநர் மனோகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: இச்செயலி மூலம் காலநிலை, வாரத்தின் 5 நாட்களின் வேளாண் பொருட்களின் விற்பனை விலை, சந்தை நிலவரம், நோய் தாக்குதலுக்கான தடுப்பு முறைகள், விற்பனையாளர் விபரம் என அனைத்து தகவல்களையும் உடனுக்குடன் பெறலாம், என தெரிவித்துள்ளார்.

## கனமழையிலும் வளரும் திராட்சை 'கிரீம்சன் சீட்லெஸ்' தயார்

கம்பம்: கனமழையையும் தாங்கி திராட்சை பழங்கள் வெடிக்காமல் இருக்கும் 'கிரீம்சன் சீட்லெஸ்' ரகத்தை சாகுபடி செய்ய கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

ஆண்டுமுழுவதும் திராட்சை கிடைக்கும் பகுதியாக கம்பம் பள்ளத்தாக்கு விளங்குகிறது. திராட்சையில் செவட்டை நோய் தாக்குதல், மழை காலங்களில் பழங்கள் உடைந்து சேதமாவது விவசாயிகளுக்கு தீராத பிரச்னையாக இருந்து வருகிறது.

ஆனைமலையன்பட்டியில் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் முயற்சியால் திராட்சை சாகுபடியில் பல்வேறு புதிய ரகங்கள் அறிமுகம் செய்து வருகின்றனர். ஏற்றுமதிக்கு ஏற்ற ரகமான 'கிரீம்சன்' சீட்லெஸ் ரகம் பற்றிய விபரத்தை திராட்சை

ஆராய்ச்சிநிலைய பேராசிரியர் பார்த்திபன், உதவி பேராசிரியர் சுப்பையா கூறியதாவது :

கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை விவசாயத்தில் மழை காலங்களில் பழங்கள் வெடிப்பது பிரச்னையாக உள்ளது. மழையை தாங்கி பழம் உடையாமல் இருக்க கூடிய கிரீம்சன் சீட்லெஸ் அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்த ரகம் மற்ற ரகங்களை விட சற்று கூடுதல் காலம் பிடிக்கும். 150 நாட்கள் வரை அறுவடைக்கு காலம் எடுத்துக் கொள்ளும். 'பிங்க்' கலரில் சதைப்பிடிப்புடன் கூடிய நீர்ச்சத்து குறைவான உண்பதற்கு ஏற்ற ரகமாகும். ஏற்றுமதிக்கு சரியானது. ஏக்கருக்கு 10 டன் வரை கிடைக்கும். விவசாயிகள் இந்த வகை ரகங்களை சாகுபடி செய்ய முன்வர வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

இதற்கிடையே சீசன் இல்லாத ஜூன் முதல் அக்டோபர் வரையான காலங்களில் இந்த ரகங்களை சாகுபடி செய்து தர சில ஏற்றுமதியாளர்கள், கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சிலருடன் பேசி வருவதாக ஆராய்ச்சி நிலையத்தினர் கூறுகின்றனர்.

## பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

பெ.நா.பாளையம்: பெத்தநாயக்கன்பாளையத்தில், இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாப்பூர், கொட்டவாடி, பெரியகிருஷ்ணாபுரம், படையாச்சியூர், கல்லேரிப்பட்டி, கொமராபாளையம் உள்ளிட்ட கிராமங்களில், நேற்று மாலை, 6 மணிக்கு துவங்கிய மழை, 7.30 மணி வரை நீடித்தது. இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ததால், அந்தந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தற்போது துவங்கியுள்ள ஆடிப்பட்ட சாகுபடிக்கு, இந்த மழை பெரிதும் கைகொடுக்கும் என்பதால், பெரும்பாலான விவசாயிகள், நடவு பணிக்கு தயாராகி வருகின்றனர்.

## கண்மாய்களை தூர்வாரவேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

திருவாடானை: ஆர்.எஸ்.மங்கலம் பெரிய கண்மாய் உள்பட மாவட்டத்தில் உள்ள அனைத்து பாசன கண்மாய்களையும் மழைக்கு முன்பு துார்வாரவேண்டும் என, விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

திருவாடானையில் விவசாயிகள் சங்க ஆலோசனை கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார்.

மாநில செயலாளர் பெருமாள், மாவட்ட செயலாளர் முத்துராமு, மாவட்ட நிர்வாகிகள் நாகநாதன், முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றிய கண்மாய்கள் மற்றும் ஜமீன் கண்மாய்கள் என,1,200க்கும் மேற்பட்ட பாசன கண்மாய்கள் உள்ளன. இவை கடந்த 30 ஆண்டுகளாக துார்வாரப்படாமல் மணல் மேவி உள்ளது. இதனால் மழை பெய்தாலும் தண்ணீர் தேக்க முடியாமல் வீணாகி வருகிறது. இக் கண்மாய்கள் மூலம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

விவசாயிகளின் நலன் கருதி பருவ மழைக்கு முன்பாக கண்மாய்களை துார்வார மாவட்ட கலெக்டர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கூட்டுறவு வங்கிகள் மட்டுமின்றி இதர வங்கிகளில் நகை அடமானத்தின் பேரில் பெறப்பட்ட விவசாய கடனை அரசு ரத்து செய்யவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நாமக்கல், கொல்லிமலையில் கனமழையால் மகிழ்ச்சி

நாமக்கல்: நாமக்கல், சேந்தமங்கலம், கொல்லிமலையில் நேற்று மாலை ஒன்றரை மணி நேரம் கனமழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நாமக்கல் மாவட்டத்தில் நேற்று காலை முதல் வெயில் வாட்டி வதைத்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது. பலரும் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள் முடிங்கினர். இந்நிலையில், நேற்று மாலை, 5 மணிக்கு, திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து கனமழை பொழியத்துவங்கியது. எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அமைதியாக மழை பொழிந்ததால், ஒன்றரை மணி நேரம் நீடித்தது. அதன் காரணமாக தாழ்வான

பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. மேலும், பள்ளங்கில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. பகலில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேபோல், சேந்தமங்கலம், கொல்லிமலை பகுதியிலும் கனமழை பெய்தது. பெருக்கெடுத்து ஓடிய தண்ணீரில், சிறுவர்கள் குதூகலமாக விளையாடினர். மேலும், சாலையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திடீரென பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### கறவை மாடு வளர்ப்பு பயிற்சி

ஈரோடு : ஈரோடு வீரப்பன்சத்திரத்தில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ பல்கலை கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் 26ம்தேதி (நாளை) மற்றும் 27ம்தேதிகளில் கறவை மாடு வளர்ப்பு என்ற தலைப்பில் இலவச பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இந்த பயிற்சி முகாமில் கறவை மாடு வளர்ப்பு குறித்து விரிவான பாடங்கள் நடத்தப்படுவதுடன் கலந்துரையாடல், வீடியோ படக்காட்சி, கேள்வி, பதில் பகுதிகளும் இடம் பெறவுள்ளது. இலவச பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பயிற்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம். ஈரோடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாய பண்ணையாளர்கள், மகளிர் சுயஉதவிக்குழுவினர் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெற ஆராய்ச்சி மையத்தின் தலைவர் யசோதை கேட்டுக் கொண்டுள்ளார்.

## இந்திய தேயிலை விற்பனையை அதிகரிக்க வேண்டும்

குன்னூர்: குன்னூரிலுள்ள வேளாண்மை மேலாண்மை மையத்தில் தேயிலையின் உற்பத்தி என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. மைய இயக்குநர் அங்யங்கார் தலைமை வகித்தார். மேலாண்மை ஆலோசகர் சுந்தர் முன்னிலை வகித்து பேசுகையில்; இந்தாண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலான 6 மாத காலத்தில் உலக அரங்கில் இந்தியாவை தவிர தேயிலை உற்பத்தி செய்யும் மற்ற நாடுகளில் உற்பத்தி குறைந்துள்ளது. இந்த வாய்ப்பை இந்தியா பயன்படுத்தி கொண்டால் விற்பனையும், தேயிலை உற்பத்தியாளர்களின் வருமானமும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. உலக தேயிலை உற்பத்தி கடந்தாண்டை விட 60.33 மில்லியன் கிலோ குறைந்துள்ளது.

கடந்தாண்டு கென்யாவில் 225.18 மில்லியன் கிலோவாக உற்பத்தி இருந்தது. மற்ற ஆப்பிரிக்க நாடுகளான மலாவி, சாந்தானியா, உக்காண்டா ஆகிய நாடுகளில் தேயிலை உ ற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. ஆசியாவை பொறுத்த வரை இலங்கையில் தேயிலை உற்பத்தி 24 லட்சம் கிலோ குறைந்துள்ளது.

இந்தியாவில் கடந்த 6 மாதங்களில் மொத்த உற்பத்தி 398.84 மில்லியன் கிலோவாக உயர்ந்துள்ளது. கடந்தாண்டு 388.71 மில்லியன் கிலோவாக இருந்தது. இதை வைத்து பார்க்கும் போது உற்பத்தி அதிகரித்து உள்ளது. உலக அரங்கில் கருப்பு தேயிலை உற்பத்தியில் முதலிடத்தை இந்தியா மீண்டும் தக்க வைத்துள்ளது. வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. 10 மில்லியன் கிலோ தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. இந்த சூழ்நிலையை தேயிலை வாரியமும் வர்த்தகர்கள் கழகமும் பயன்படுத்தி இந்திய தேயிலை விற்பனையை அதிகரிக்க நடவடிக்க எடுக்க வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சை விலை கடும் உயர்வு; விவசாயிகள் மகிழ்ச்சி



உத்தமபாளையம்,

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சை விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதன்படி ஒரு கிலோ ரூ.120–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

<u>அதிக வரவேற்பு</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் நெல், வாழை, தென்னை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் நடைபெறுகிறது. இங்குள்ள காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி,

நாராயணதேவன்பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, கூடலூர், க.புதுப்பட்டி, உத்தமபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான அளவில் கருப்பு பன்னீர் திராட்சை பயிரிடப்பட்டு உள்ளது.

இதனால் தமிழகத்தில் ஆண்டு முழுவதும் திராட்சை பழம் கிடைக்கும் இடமாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விளங்குகிறது. இங்கு விளையும் கருப்பு திராட்சை இயற்கையிலேயே மருத்துவ குணம் கொண்டது என்ற கருத்து நிலவுவதால் இவற்றுக்கு கேரளாவில் எப்போதும் அதிக வரவேற்பு இருக்கும்.

<u>பூக்கள் உதிர்ந்தன</u>

அத்துடன் இந்த பகுதியில் இருந்து மதுரை, கோவை, சென்னை மற்றும் தமிழகத்தின் பல்வேறு நகரங்களுக்கும் திராட்சை பழங்கள் தரம் பிரிக்கப்பட்டு அட்டைப்பெட்டிகளில் 5 கிலோ வரை அடைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்த பகுதியில் மழை பெய்யவில்லை. அத்துடன் வெயிலின் தாக்கமும் அதிகமாக இருந்தது. இதனால் திராட்சை கொடிகளில் இருந்த பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்தன.

இதன் காரணமாக திராட்சை பழங்களின் வரத்து குறைந்துள்ளது. எனவே அவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. அதன்படி தோட்டங்களில் கருப்பு பன்னீர் திராட்சையை ஒரு கிலோவுக்கு ரூ.120 கொடுத்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். கடந்த மாதம் வரை ஒரு கிலோ திராட்சை ரூ.50 முதல் ரூ.60 வரை மட்டுமே வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. இதுகுறித்து உத்தமபாளையம் பகுதியை சேர்ந்த திராட்சை விவசாயிகள் கூறியதாவது:–

<u>போட்டி நிலவுகிறது</u>

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம் மற்றும் மிதமான தட்பவெப்ப நிலை உள்ளது. இதனால் இங்கு கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடும் வெயில் காரணமாக பூக்கள் மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்ததால் விளைச்சல் 50 சதவீதமாக குறைந்து விட்டது.

இதனால் திராட்சை பழங்களை கொள்முதல் செய்ய வியாபாரிகளிடம் போட்டி நிலவுகிறது. எனவே கூடுதல் விலை கொடுக்கின்றனர். முன்பு எப்போதும்

இல்லாத வகையில் தற்போது ஒரு கிலோ ரூ.120–க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.